கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 38/2017**
திருமதி. சுமதி (DW–3) **17.2.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. வாதியின் தகப்பனார் பிரின்ஸ் டிரைவிங் என்ற தொழிலை செய்து வந்தார் என்றால் ஆமாம். தொழிலுக்காக அவர் கார்ப்பரேஷன் வங்கியில் கடன் பெற்றிருந்தார் என்றால் சரி. அந்த கடன் முழுவதையும் 2016 ஆம் வருடம் தவணைகள் முழுவதும் செலுத்தப்பட்டு கடன் முடிவுற்றது என்றால் ஆமாம். தாவா சொத்தை பொருத்து கார்ப்பரேஷன் வங்கியில் தற்போது கடன் எதுவும் நிலுவையில் இல்லை என்றால் சரி கடன் தொகை முழுவதும் செலுத்தப்பட்டதால் கடனுக்காக வாதியின் தகப்பனார் வங்கியில் ஒப்படைத்து இருந்த ஆவணங்கள் அனைத்தும் அவரிடம் திருப்பி வங்கி ஒப்படைத்து விட்டது என்றால் ஆமாம் தாவாவிற்கும் ஏழாம் பிரதிவாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை தேவையில்லாமல் சேர்க்கப்பட்டுள்ளதால் 7ம் பிரதிவாதிக்கு எதிராக தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாவா தாக்கல் செய்துள்ளவர் என்னுடைய சகோதரர் என்றால் ஆமாம். வாதி மட்டுமில்லாமல் கோவிந்தராஜ் என்ற ஒரு சகோதரர் எனக்கு உண்டு என்றால் ஆமாம். கோவிந்தராஜுக்கு 1992 இல் திருமணம் எப்போது நடந்தது என்றால் ஞாபகம் இல்லை. கோவிந்தராஜ் திருமணம் நடந்த பிறகு தனிக்குடித்தனமாக வசித்து வந்தார் என்றால் சரி. 1979 ஆம் வருடம் என்னுடைய தகப்பனார் மேலும் இரண்டு நபர்களுடன் சேர்ந்து சிவ சண்முகம் ப்ளீச்சர்ஸ் என்ற தொழில் செய்து வந்தார் என்றால் தவறு. தனிப்பட்ட முறையில் செய்து வந்தார். 1981 ஆம் வருடத்திற்கு பிறகு வாதியும் அவருடைய தகப்பனார் உடன் சேர்ந்து ப்ளீச்சிங் தொழில் செய்து வந்தார் என்றால் தவறு. வாதி

ராஜேஸ்வரி ப்ளீச்சிங் என்ற தொழிலை தனிப்பட்ட முறையில் நடத்தி வந்தார் என்றால் தவறு. அதுவும் என் தகப்பனார் தான் நடத்தி வந்தார். மாசுகட்டுப்பாட்டு வாரியம் ராஜேஸ்வரி ப்ளீச்சிங் லைசென்ஸ் கொடுத்துள்ளது என்றால் தவறு. பிரின்ஸ் டையிங் பிரின்ஸ் டையிங் தான் லைசன்ஸ் கொடுக்கப்பட்டுள்ளது. 1992 ஆம் வருடம் என் தகப்பனார் துரைசாமி மற்றும் குணசேகரன் ஆகியோருடன் சேர்ந்து பிரின்ஸ் டையிங் தொழிலை ஆரம்பித்தார் என்றால் தவறு.

2. தனிப்பட்ட முறையில் ஆரம்பித்தார்.1998 ஆம் வருடம் குணசேகரனும் துரைசாமியும் பிரின்ஸ் டையிங்யில் இருந்து விலகிய பிறகு என்னுடைய சகோதரர் ரத்தினசாமி என்னுடைய தகப்பனார் உடன் சேர்ந்து பிரின்ஸ் டையிங் தொழில் செய்து பார்த்து வந்தார்கள் என்றால் தவறு. தகப்பனார் தனிப்பட்ட முறையில் செய்து வந்தார். வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பற்றி தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரியும். 20.01.1999 ஆம் வருடம் என்னுடைய தகப்பனாரும் வாதியும் சேர்ந்து தொழில் செய்வதை பொறுத்து பதிவு செய்யப்பட்ட தொழில் கூட்டான்மை பத்திரம் ஏற்பட்டுள்ளது என்றால் தவறு. அது பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் தவறு. ஆடிட்டர் சொன்னதன் பேரில் ஏற்பட்ட ஆவணம் அந்த ஆவணத்தை என் தகப்பனார் அதன் பிறகு ரத்து செய்து விட்டார். தவறாக சாட்சியம் அளிக்கிறேன் 1999 ஆம் வருடத்தில் இருந்து என்னுடைய தகப்பனாரும் ரத்தனசாமியும் சேர்ந்து பிரின்ஸ் டையிங் தொழிலை கூட்டாக பார்த்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

3. ராஜேஸ்வரி ப்ளீச்சிங் நிறுவனமும், பிரின்ஸ் டையிங் நிறுவனமும் சேர்த்து வியாபாரம் பார்த்து கூட்டாக நடைபெற்று வந்தது என்றால் தவறு. ராஜேஸ்வரி நிறுவனமே இருந்தது. மிஷனரிஸ் கிடையாது. ஆனால் அம்மாதிரி ஒரு தொட்டி இருந்தது. 2005 ஆம் வருடம் முருகன்பாளையம் பொது சுத்திகரிப்பு நிறுவனம் என்று ஒரு அமைப்பு நிறுவப்பட்டது என்றால் சரி. அதற்காக பிரின்ஸ் டையிங் நிறுவனத்திலிருந்து தொகையை எடுத்து ஒரு பகுதி கிரயமாகப் பெறப்பட்டுள்ளது என்றால் என் தகப்பனார் வாங்கினார் அந்த தொகை

ரத்தினசாமியின் சொத்துக்கள் மற்றும் பிரின்ஸ் டையிங்கில் அவருடைய பங்குத்தொகை ஆகியவற்றை வைத்து தான் தொகை செலுத்தப்பட்டது என்றால் தவறு. என் தகப்பனார் தனிப்பட்ட முறையில் செலுத்தினார். அவர் பெற்ற லோன் ரத்தினசாமி அவருடைய வியாபாரத்திற்காக பெற்றார். பிரின்ஸ் டையிங் என்னுடைய தகப்பனாரும் வாதியும் சரிபாக பாத்தியம் உடையவர்கள் என்பதால் பிரின்ஸ் டையிங் பொறுத்து பாதிக்கு 50 சதவீத பாத்தியம் உண்டு என்றால் தவறு. சுத்திகரிப்பு நிறுவனம் 1.7.2005 இல் பிரின்ஸ்பயிங் தொழிலுக்காக 2 லட்சம் லிட்டர் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அனுமதி கொடுத்துள்ளது என்றால் சரி.

4. உரிமையாளர் என்ற முறையில் ராமசாமிக்கு கொடுத்துள்ளார்கள் சங்கங்களின் தேர்தலின் போது பங்குதாரர் என்ற உரிமையில் ரத்தினசாமி பிரின்ஸ் டையிங் சுத்திகரிப்புக்காக வாக்குகளை செலுத்தியுள்ளார் என்றால் தவறு. என் தகப்பனார் இறப்பதற்கு ஒரு வருடம் முன்பு வரை உடல்நிலை சரியில்லாமல் நினைவு இன்றி படுத்த படுக்கையாக இருந்து வந்தார் என்றால் தவறு. நல்ல நிலையில் இருந்தார். என்னுடைய சகோதரர் கோவிந்தராஜ் திருமணத்தின் போது ஏற்பட்ட பிரச்சனை காரணமாக நானும் என்னுடைய சகோதரியும் சேர்ந்து அவருக்கு குடும்ப சொத்துக்கள் சென்றடைய கூடாது என்ற எண்ணத்தில் தான செட்டில்மெண்ட் பத்திரங்களை மோசடியாக உருவாக்கி உள்ளோம் என்றால் தவறு. என்னுடைய தகப்பனார் ஆரம்பத்தில் மூட்டை தூக்கும் தொழில் பார்த்து வந்தார் என்றால் தவறு. காட்டன் மார்க்கெட்டுக்கும் கதர்க்கடைக்கும் சென்று வந்தார். என்னுடைய தகப்பனார் கையொப்பம் செய்வார். ஆனால் எழுத படிக்க தெரியாது என்றால் தெரியும்.

5. என்னுடைய தகப்பனாருக்கு எழுத படிக்கத் தெரியாது என்பதை பயன்படுத்தி 21.7.2011 ஆம் தேதி தாவா சொத்தைப் பொறுத்து என்னுடைய தாயார் பெயரில் ஒரு ஆவணத்தை உருவாக்கி உள்ளோம் என்றால் தவறு. அந்த ஆவணம் ஏற்பட்ட போது அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதே என் தகப்பனாருக்கு தெரியாது என்றால் தவறு. அவருக்கு விவரங்கள் தெரியும். அந்த

ஆவணத்தை தயார் செய்வதற்காக என்னுடைய சகோதரியின் கணவர் முத்துக்குமாரையும் கூட்டு சேர்ந்து ஆவணங்களை மோசடியாக ஏற்படுத்தி உள்ளோம் என்றால் சரியல்ல.. என் தாயார் பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் டையிங் நிறுவனத்தைப் பற்றி எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரி. அதற்கு தனியாக ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அதற்காக வர்த்தமான் லெட்டர் என்னுடைய தகப்பனார் ஏற்படுத்தியதாக பொய்யாக கூறுகிறேன். அது எங்களால் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. தாவா சொத்து நல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்துக்குள் வருகிறது என்றால் சரி. என்னுடைய தாயார் என்னுடன் என்னுடைய கட்டுப்பாட்டில் இருந்து வருகிறார் என்றால் தவறு.

6. அவர் அவருடைய வீட்டில் வசிக்கிறார். தாவா சொத்தை முதலில் என்னுடைய தாயார் பெயரில் மோசடியாக ஆவணம் உருவாக்கி அதன் பிறகு என்னுடைய மகன் பெயரில் மோசடியாக ஆவணங்கள் ஏற்படுத்தி உள்ளோம் என்றால் தவறு. என்னுடைய மகன் பெயரில் ஏற்பட்ட ஆவணம் நல்லூர் சார்பதிவாளர்களுக்கு ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியில்ல. வேண்டுமென்றே வேறு ஒரு சொத்தை சேர்த்து தாவா சொத்தையும் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வேறு சார் பதிவாளர் அலுவலகத்தில் மோசடியாக என் மகன் பெயரில் ஆவணம் ஏற்படுத்தி உள்ளீர்கள் என்றால் சரியல்ல. என் மகன் பெயரில் ஏற்பட்ட ஆவணத்திலும் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செலவாகும் தண்ணீர் மற்றும் பிரின்ஸ் டையிங் நிறுவனத்தை பற்றிய விவரங்கள் பொருத்து எந்த குறிப்புகளும் இல்லை என்றால் சரி. சொத்துகளுக்கு பிரச்சனை ஏற்பட்டு விடும் என்பதால் அவ்வாறு எழுதவில்லை. என்னுடைய தாயார் அது சம்பந்தமாக என்னுடைய மகனுக்கு ஒரு வர்த்தமான் லெட்டர் எழுதிக் கொடுத்தாக சொல்லிள்ளோம் என்றால் சரி.

7. அந்தக் கடிதமும் என்னுடைய மகன் தாக்கல் செய்த வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் இறந்த பிறகு அவருடைய வாரிசுதாரர்கள் அனைவருக்கும் வங்கியில்

இருந்து கடன் தொகையை செலுத்துமாறு கடிதம் வந்தது என்றால் ஆமாம். ஓகே டெக்ஸ் கந்தசாமி என்னுடைய உறவினரா என்றால் தவறு. தெரிந்த நபர். அவர் முன்னிலையில் என்னுடைய அப்பாவின் வாரிசுதாரர்கள் அனைவரும் உட்கார்ந்து பேசி அனைவரும் சேர்ந்து கடன் தொகையை கட்டிவிடலாம் என்று முடிவு செய்தோம் என்றால் தவறு. அதன் அடிப்படையில் எல்லா வாரிசுதாரர்களும் சேர்ந்து கொடுத்த தொகையை தான் வங்கி கடனாக முழுமையாக செலுத்தப்பட்டது என்றால் தவறு. தாயார் தான் செலுத்தினார். என்னுடைய தாயாருக்கு கடன் தொகை முழுவதையும் செலுத்துவதற்கு அந்த சமயத்தில் வசதியே கிடையாது என்றால் தவறு.

8. வசதி இருந்தது நானும் என் கணவரும் பணம் கொடுத்து இருந்தோம். சுத்திகரிப்பு நிலையத்திற்கு 45 லட்சம் செலுத்த வேண்டும் என்று என்னுடைய தகப்பனார் இறந்த பிறகு எல்லா வாரிசுதாரர்களுக்கும் கடிதம் வந்தது என்றால் தவறு. ஆனால் சொன்னார்கள். அந்த கடனை திருப்பிச் செலுத்துமாறு எல்லா வாரிசுதாரர்களுக்கும் கடிதம் வந்தது என்றால் சரியல்ல. அந்த கடிதத்திற்கு நானும் என்னுடைய அம்மாவும் பதில் கொடுத்துள்ளோம் என்றால் இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் வா.சா.ஆ–22 இல் சுமதி என்று உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் இல்லை. அது வாயால் தயார் செய்யப்பட்ட ஆவணம். வா.சா.ஆ–22 ஆவணம் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து தான் வந்துள்ளது என்றால் சரி. ரத்தினசாமிக்கு வந்துள்ளது. அதில் என்னுடைய தாயார் மற்றும் நான் கொடுத்த கடிதம் இணைக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த கடிதத்தில் நானும் என்னுடைய தாயார் என்னுடைய தகப்பனாரின் சொத்துக்களில் ஐந்தில் ஒரு பங்கு உள்ளதாக தெரிவித்து. அதற்குரிய கடனை செலுத்துவதாக குறிப்பிட்டுச் சொல்லி உள்ளோம் என்றால் தவறு.

9. ரத்தினசாமி முழு உரிமையும் உள்ளதாக சுத்திகரிப்பு நிலைய அதிகாரிகளிடம் இணைப்பு கேட்டபோது சுத்திகரிப்பு நிலையம் மற்ற வாரிசுதாரர்களான நானும், என் தாயாரும் அனுப்பிய கடிதத்தை இணைத்து

அனுப்பியுள்ளார்கள் என்றால் தவறு. தாவா சொத்தை பொறுத்த என் தகப்பனார் யாருக்கும் எதுவும் எழுதி வைக்கவில்லை. அதனால் தான் சுத்திகரிப்பு நிலையத்திலும் வங்கிகளும் ஐந்தில் ஒரு பங்கு உள்ளதாக நான் கடிதம் மூலம் தெரிவித்துள்ளேன் என்றால் தவறு. பிரின்ஸ் டையிங்கில் 20 ஆயிரம் சதுர அடியில் குடோன் இருந்தது என்றால் ஆமாம். என்னுடைய தாயார் பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் ரூ.20,000/- சதுர அடி என்று சொல்லாமல் 350 சதுர அடி என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறாக சொல்லப்பட்டுள்ளது. இடிந்த நிலையில் இருந்ததால் நல்ல நிலையில் இருந்த கட்டிடத்தை மட்டும் பொருத்து ஏற்படுத்தி உள்ளோம்.

10. என் தகப்பனார் இறந்த பிறகு சிறிது காலம் இரத்தினசாமி தான் டையிங் பேக்டரியை நடத்தி வந்தார் என்றால் தவறு. அதன் பிறகு நான் என் மகனை வைத்து அவருக்கு உரிமை இருப்பதாக சொல்லி அசல் வழக்கில் 100/2017 தாக்கல் செய்து தகராறு செய்து தொழில் நடத்த விடாமல் செய்தோம் என்றால் தவறு. அதனால் தான் அவரால் தொழிலை தொடர்ந்து நடத்த முடியவில்லை என்றால் சரியில்ல. 21.7.2011 இல் என் தகப்பனார் என்னுடைய தாயார் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியதாக சொல்வதே பொய் என்றால் சரியல்ல. அதன் பிறகு 22.11.2014 ஆம் வருடம் நானும் என்னுடைய தாயாரும் சேர்ந்து என்னுடைய மகன் பெயருக்கு ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் பத்திரமும் மோசடியானது செல்லாது அமலுக்கு வரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் இறந்து போன என் தகப்பனாரின் அனைத்து வாரிசுகளுக்கும் சரிபாகம் உண்டு என்றால் சரியல்ல. சுத்திகரிப்பு நிலையத்திற்கு 2,20,000/- தண்ணீரை உபயோகம் செய்வது முழுவதும் வாதிக்குத்தான் பாத்தியப்பட்டது என்றால் தவறு. அசல் வழக்கு எண் 100/2017 தள்ளுபடி செய்யப்பட வேண்டும். அசல் வழக்கில் 38/2017, 98/2021 வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.02.17 18:58:14 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.